No. of Printed Pages : **12**

**9012**

**M**

பதிவு எண்
Register Number

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

## PART - III

# கணிதம் / MATHEMATICS

( தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம் ] [ மொத்த மதிப்பெண்கள் : 90

Time Allowed : 3.00 Hours ] [Maximum Marks : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

**Instructions :** (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

### பகுதி - I / PART - I

**குறிப்பு :** (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20x1=20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள **நான்கு** மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

**Note :** (i) **All** questions are compulsory.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

**1.** A என்ற $3 \times 3$ பூச்சியமற்றக் கோவை அணிக்கு $AA^T = A^TA$ மற்றும் $B = A^{-1} A^T$ என்றவாறு இருப்பின், $BB^T =$

(அ) $I_3$ (ஆ) A (இ) $B^T$ (ஈ) B

If A is a $3 \times 3$ non-singular matrix such that $AA^T = A^TA$ and $B = A^{-1} A^T$, then $BB^T =$

(a) $I_3$ (b) A (c) $B^T$ (d) B

**2.** $\rho(A) = \rho([A|B])$ எனில், AX = B என்ற நேரியச் சமன்பாடுகளின் தொகுப்பானது :

(அ) ஒருங்கமைவுடையது மற்றும் எண்ணற்ற தீர்வுகள் பெற்றிருக்கும்.

(ஆ) ஒருங்கமைவுடையது மற்றும் ஒரே ஒரு தீர்வு பெற்றிருக்கும்.

(இ) ஒருங்கமைவற்றது.

(ஈ) ஒருங்கமைவுடையது.

If $\rho(A) = \rho([A|B])$, then the system AX = B of linear equations is :

(a) consistent and has infinitely many solutions

(b) consistent and has a unique solution

(c) inconsistent

(d) consistent

**3.** $z$ என்ற கலப்பெண்ணானது $z \in \mathbf{C} \setminus \mathbf{R}$ ஆகவும் $z + \frac{1}{z} \in \mathbf{R}$ எனவும் இருந்தால், $|z|$ -ன் மதிப்பு :

(அ) 2 (ஆ) 0 (இ) 3 (ஈ) 1

If $z$ is a complex number such that $z \in \mathbf{C} \setminus \mathbf{R}$ and $z + \frac{1}{z} \in \mathbf{R}$, then $|z|$ is :

(a) 2 (b) 0 (c) 3 (d) 1

**4.** $\left(\cos\frac{\pi}{3} + i \sin\frac{\pi}{3}\right)^{3/4}$ -ன் எல்லா நான்கு மதிப்புகளின் பெருக்குத் தொகை :

(அ) 1 (ஆ) $-2$ (இ) 2 (ஈ) $-1$

The product of all four values of $\left(\cos\frac{\pi}{3} + i \sin\frac{\pi}{3}\right)^{3/4}$ is :

(a) 1 (b) $-2$ (c) 2 (d) $-1$

**5.** $f$ மற்றும் g என்பன முறையே m மற்றும் n படியுள்ள பல்லுறுப்புக்கோவைகள் மற்றும் $h(x) = (f \circ g)(x)$ எனில், h -ன் படியானது :

(அ) $m^n$ (ஆ) mn (இ) $n^m$ (ஈ) $m+n$

If $f$ and g are polynomials of degrees m and n respectively and if $h(x) = (f \circ g)(x)$, then the degree of h is :

(a) $m^n$ (b) mn (c) $n^m$ (d) $m+n$

6. $x<0$ எனில், $\tan^{-1}\left(\frac{1}{x}\right)$ -ன் மதிப்பு :

(அ) $-\pi + \cot^{-1}(x)$ (ஆ) $\tan^{-1}(x)$
(இ) $-\pi + \tan^{-1}x$ (ஈ) $\cot^{-1}(x)$

If $x<0$, then $\tan^{-1}\left(\frac{1}{x}\right)$ is equal to :

(a) $-\pi + \cot^{-1}(x)$ (b) $\tan^{-1}(x)$
(c) $-\pi + \tan^{-1}x$ (d) $\cot^{-1}(x)$

7. வட்டத்தின் மையத்தொலைத்தகவு :

(அ) $\frac{1}{2}$ (ஆ) 0 (இ) 2 (ஈ) 1

The eccentricity of the circle is :

(a) $\frac{1}{2}$ (b) 0 (c) 2 (d) 1

8. $\vec{\beta}$ மற்றும் $\vec{\gamma}$ ஆகியவை அமைக்கும் தளத்தில் $\vec{\alpha}$ அமைந்துள்ளது எனில்,

(அ) $\left[\vec{\alpha}, \vec{\beta}, \vec{\gamma}\right]=0$ (ஆ) $\left[\vec{\alpha}, \vec{\beta}, \vec{\gamma}\right]=1$

(இ) $\left[\vec{\alpha}, \vec{\beta}, \vec{\gamma}\right]=2$ (ஈ) $\left[\vec{\alpha}, \vec{\beta}, \vec{\gamma}\right]=-1$

If a vector $\vec{\alpha}$ lies in the plane $\vec{\beta}$ and $\vec{\gamma}$, then

(a) $\left[\vec{\alpha}, \vec{\beta}, \vec{\gamma}\right]=0$ (b) $\left[\vec{\alpha}, \vec{\beta}, \vec{\gamma}\right]=1$

(c) $\left[\vec{\alpha}, \vec{\beta}, \vec{\gamma}\right]=2$ (d) $\left[\vec{\alpha}, \vec{\beta}, \vec{\gamma}\right]=-1$

9. $\vec{r}\cdot\left(\hat{i}+2\hat{j}+4\hat{k}\right)=38$ என்ற தளத்தைப் பொறுத்து A(1, 2, 3) என்ற புள்ளியின் பிம்பப்புள்ளி, A'(3, 6, 11) எனில், A என்ற புள்ளியிலிருந்து கொடுக்கப்பட்ட தளத்திற்கு வரையப்படும் செங்குத்தின் அடி :

(அ) (2, 5, 7) (ஆ) (2, 3, 7) (இ) (2, −4, 7) (ஈ) (2, 4, 7)

If the image of the point A(1, 2, 3) with respect to the plane $\vec{r}\cdot\left(\hat{i}+2\hat{j}+4\hat{k}\right)=38$ is A'(3, 6, 11), then the foot of the perpendicular from the point A to the given plane is :

(a) (2, 5, 7) (b) (2, 3, 7) (c) (2, −4, 7) (d) (2, 4, 7)

**10.** (6, 0) என்ற புள்ளிக்கும் $x^2-y^2=4$ என்ற வளைவரை மீதுள்ள புள்ளிக்கும் உள்ள தொலைவு குறைந்தபட்சம் எனில், அப்புள்ளி :

(அ) $(3,\sqrt{5})$ (ஆ) (2, 0) (இ) $(\sqrt{13},-\sqrt{3})$ (ஈ) $(\sqrt{5},1)$

One of the closest points on the curve $x^2-y^2=4$ to the point (6, 0) is :

(a) $(3,\sqrt{5})$ (b) (2, 0) (c) $(\sqrt{13},-\sqrt{3})$ (d) $(\sqrt{5},1)$

**11.** $f(x)=x^3-3x^2$, $x\in[0, 3]$ என்ற சார்பிற்கு ரோலின் தேற்றத்தை நிறைவு செய்யும் 'c' -யின் மதிப்பு :

(அ) $\frac{3}{2}$ (ஆ) 1 (இ) 2 (ஈ) $\sqrt{2}$

The value of 'c' satisfied by the Rolle's theorem for the function $f(x)=x^3-3x^2$, $x\in[0, 3]$ is :

(a) $\frac{3}{2}$ (b) 1 (c) 2 (d) $\sqrt{2}$

**12.** 31 -ன் 5 ஆம் படி மூல சதவீதப் பிழை தோராயமாக, 31 -ன் சதவீதப் பிழையைப் போல் எத்தனை மடங்காகும் ?

(அ) 5 (ஆ) $\frac{1}{31}$ (இ) 31 (ஈ) $\frac{1}{5}$

The percentage error of fifth root of 31 is approximately how many times the percentage error in 31 ?

(a) 5 (b) $\frac{1}{31}$ (c) 31 (d) $\frac{1}{5}$

**13.** A = $\{(x, y) \mid a<x<b, c<y<d\} \subset \mathbf{R}^2$ என்க. சார்பு $u : A \to \mathbf{R}^2$ ஆனது A -ல் சீரானது எனில்,

(அ) $\frac{\partial^2 u}{\partial x^2}+\frac{\partial^2 u}{\partial y^2}=0\ \forall (x,y)\in A$ (ஆ) $\frac{\partial^2 u}{\partial x^2}+\frac{\partial^2 u}{\partial y^2}=1\ \forall (x,y)\in A$

(இ) $\frac{\partial^2 u}{\partial x^2}-\frac{\partial^2 u}{\partial y^2}=0\ \forall (x,y)\in A$ (ஈ) $\frac{\partial^2 u}{\partial x^2}-\frac{\partial^2 u}{\partial y^2}=1\ \forall (x,y)\in A$

Let A = $\{(x, y) \mid a<x<b, c<y<d\} \subset \mathbf{R}^2$. If the function $u : A \to \mathbf{R}^2$ is harmonic in A, then :

(a) $\frac{\partial^2 u}{\partial x^2}+\frac{\partial^2 u}{\partial y^2}=0\ \forall (x,y)\in A$ (b) $\frac{\partial^2 u}{\partial x^2}+\frac{\partial^2 u}{\partial y^2}=1\ \forall (x,y)\in A$

(c) $\frac{\partial^2 u}{\partial x^2}-\frac{\partial^2 u}{\partial y^2}=0\ \forall (x,y)\in A$ (d) $\frac{\partial^2 u}{\partial x^2}-\frac{\partial^2 u}{\partial y^2}=1\ \forall (x,y)\in A$

**14.** $f(x) = \int_0^x t\cos t \, dt$, எனில் $\frac{df}{dx} =$

(அ) $x\cos x$ (ஆ) $\cos x - x\sin x$ (இ) $x\sin x$ (ஈ) $\sin x + x\cos x$

If $f(x) = \int_0^x t\cos t \, dt$, then $\frac{df}{dx} =$

(a) $x\cos x$ (b) $\cos x - x\sin x$ (c) $x\sin x$ (d) $\sin x + x\cos x$

**15.** $f(x) = \int_1^x \frac{e^{\sin u}}{u} du, x > 1$ மற்றும் $\int_1^3 \frac{e^{\sin x^2}}{x} dx = \frac{1}{2}\left[f(a) - f(1)\right]$ எனில், a பெறக்கூடிய ஒரு மதிப்பு :

(அ) 9 (ஆ) 3 (இ) 5 (ஈ) 6

If $f(x) = \int_1^x \frac{e^{\sin u}}{u} du, x > 1$ and $\int_1^3 \frac{e^{\sin x^2}}{x} dx = \frac{1}{2}\left[f(a) - f(1)\right]$, then one of the possible value of a is :

(a) 9 (b) 3 (c) 5 (d) 6

**16.** $2x\frac{dy}{dx} - y = 3$ எனும் வகைக்கெழுச் சமன்பாட்டின் தீர்வு குறிப்பிடுவது :

(அ) பரவளையம் (ஆ) நேர்க்கோடுகள்
(இ) நீள்வட்டம் (ஈ) வட்டங்கள்

The solution of the differential equation $2x\frac{dy}{dx} - y = 3$ represents :

(a) Parabola (b) Straight lines
(c) Ellipse (d) Circles

**17.** t எனும் நேரத்திற்குப் பிறகு மீதமுள்ள ஒரு பொருளின் அளவு P ஆகும். பொருள் ஆவியாகும் வீதமானது அந்நேரத்தில் மீதமிருக்கும் பொருளின் அளவிற்கு விகிதமாக அமைந்துள்ளது எனில், பின்னர் :

(அ) $P = Ckt$ (ஆ) $P = Ce^{kt}$ (இ) $Pt = C$ (ஈ) $P = Ce^{-kt}$

P is the amount of certain substance left in after time t. If the rate of evaporation of the substance is proportional to the amount remaining, then :

(a) $P = Ckt$ (b) $P = Ce^{kt}$ (c) $Pt = C$ (d) $P = Ce^{-kt}$

**18.** $f(x) = \frac{1}{12}$, a<$x$<b எனும் சார்பு ஒரு தொடர்ச்சியான சமவாய்ப்பு மாறி X -ன் நிகழ்தகவு அடர்த்தி சார்பினைக் குறிக்கிறது எனில், பின்வருவனவற்றுள் எது a மற்றும் b -இன் மதிப்புகளாக இராது ?

(அ) 7 மற்றும் 19 (ஆ) 0 மற்றும் 12

(இ) 16 மற்றும் 24 (ஈ) 5 மற்றும் 17

If the function $f(x) = \frac{1}{12}$ for a<$x$<b, represents a probability density function of a continuous random variable X, then which of the following cannot be the value of a and b ?

(a) 7 and 19 (b) 0 and 12

(c) 16 and 24 (d) 5 and 17

**19.** 2$l$ நீளமுள்ள ஒரு கம்பி சமவாய்ப்பு முறையில் இரு துண்டாக உடைக்கப்படுகிறது. இரு துண்டுகளில் குட்டையானதற்கான நிகழ்தகவு அடர்த்தி சார்பு $f(x) = \begin{cases} \frac{1}{l} & 0 < x < l \\ 0 & l \leq x < 2l \end{cases}$ எனில், குட்டையானப் பகுதிக்கான சராசரி மற்றும் பரவற்படி முறையே :

(அ) $l, \frac{l^2}{12}$ (ஆ) $\frac{l}{2}, \frac{l^2}{3}$ (இ) $\frac{l}{2}, \frac{l^2}{12}$ (ஈ) $\frac{l}{2}, \frac{l^2}{6}$

A rod of length 2$l$ is broken into two pieces at random. The probability density function of the shorter of the two pieces is $f(x) = \begin{cases} \frac{1}{l} & 0 < x < l \\ 0 & l \leq x < 2l \end{cases}$. The mean and variance of the shorter of the two pieces are respectively :

(a) $l, \frac{l^2}{12}$ (b) $\frac{l}{2}, \frac{l^2}{3}$ (c) $\frac{l}{2}, \frac{l^2}{12}$ (d) $\frac{l}{2}, \frac{l^2}{6}$

**20.** $\neg(p\vee q)\vee[p\vee(p\wedge\neg r)]$ -ன் இருமம் :

(அ) $\neg(p\wedge q)\wedge[p\wedge(p\wedge r)]$ (ஆ) $\neg(p\wedge q)\wedge[p\vee(p\wedge\neg r)]$

(இ) $\neg(p\wedge q)\wedge[p\wedge(p\vee\neg r)]$ (ஈ) $(p\wedge q)\wedge[p\wedge(p\vee\neg r)]$

The dual of $\neg(p\vee q)\vee[p\vee(p\wedge\neg r)]$ is :

(a) $\neg(p\wedge q)\wedge[p\wedge(p\wedge r)]$ (b) $\neg(p\wedge q)\wedge[p\vee(p\wedge\neg r)]$

(c) $\neg(p\wedge q)\wedge[p\wedge(p\vee\neg r)]$ (d) $(p\wedge q)\wedge[p\wedge(p\vee\neg r)]$

## பகுதி - II / PART - II

**குறிப்பு :** **எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **30 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x2=14**

**Note :** Answer **any seven** questions. Question No. **30** is **compulsory**.

**21.** A என்பது ஒற்றை வரிசையுடைய பூச்சியமற்ற கோவை அணி எனில், $|\text{adj A}|$ என்பது மிகை எண் என நிறுவுக.

If A is a non-singular matrix of odd order, prove that $|\text{adj A}|$ is positive.

**22.** சுருக்குக : $\sum_{n=1}^{12} i^n$

Simplify : $\sum_{n=1}^{12} i^n$

**23.** $x^2+2(k+2)x+9k=0$ எனும் சமன்பாட்டின் மூலங்கள் சமம் எனில், k -ன் மதிப்பு காண்க.
If $x^2+2(k+2)x+9k=0$ has equal roots, find k.

**24.** சுருக்குக : $\sin^{-1}[\sin 10]$
Simplify : $\sin^{-1}[\sin 10]$

**25.** ஆரம் 5 செ.மீ உடையதும், $x$ -அச்சை ஆதிப்புள்ளியில் தொட்டுச் செல்வதுமான வட்டங்களின் சமன்பாட்டைத் தருவிக்க.
Obtain the equation of the circles with radius 5 cm and touching $x$-axis at the origin in general form.

**26.** $f(x)=x^2-2x-3$ என்ற சார்பு $(2, \infty)$ என்ற இடைவெளியில் திட்டமாக ஏறும் என நிறுவுக.
Prove that the function $f(x)=x^2-2x-3$ is strictly increasing in the interval $(2, \infty)$.

**27.** $f(x, y) = \cos^{-1}\left(\frac{x}{y}\right)$ எனில், $f_y = \frac{x}{y\sqrt{y^2-x^2}}$ என நிறுவுக.

If $f(x, y) = \cos^{-1}\left(\frac{x}{y}\right)$, then show that $f_y = \frac{x}{y\sqrt{y^2-x^2}}$.

**28.** மதிப்பிடுக : $\int_{0}^{\frac{\pi}{2}} \sin^{10} x \, dx$

Evaluate : $\int_{0}^{\frac{\pi}{2}} \sin^{10} x \, dx$

**29.** $x^2 \frac{d^2y}{dx^2} + \left[1 + \left(\frac{dy}{dx}\right)^2\right]^{1/2} = 0$ என்ற வகைக்கெழு சமன்பாட்டின் வரிசை மற்றும் படியை (இருக்குமானால்) தீர்மானிக்க.

Determine the order and degree (if exists) of the differential equation

$$x^2 \frac{d^2y}{dx^2} + \left[1 + \left(\frac{dy}{dx}\right)^2\right]^{1/2} = 0$$

**30.** $\sqrt{Var(X)} = \frac{1}{2}$ எனில், Var (2X+3) -ன் மதிப்பு காண்க.

If $\sqrt{Var(X)} = \frac{1}{2}$ then, find the value of Var (2X+3).

## பகுதி - III / PART - III

**குறிப்பு : எவையேனும் ஏழு** வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **40 -க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **7x3=21**

**Note :** Answer **any seven** questions. Question No. **40** is **compulsory**.

**31.** $\begin{bmatrix} 2 & -2 & 4 & 3 \\ -3 & 4 & -2 & -1 \\ 6 & 2 & -1 & 7 \end{bmatrix}$ என்ற அணியை ஏறுபடி வடிவில் மாற்றி அணித்தரம் காண்க.

Find the rank of the matrix $\begin{bmatrix} 2 & -2 & 4 & 3 \\ -3 & 4 & -2 & -1 \\ 6 & 2 & -1 & 7 \end{bmatrix}$ by reducing it to an echelon form.

**32.** $4^x - 3(2^{x+2}) + 2^5 = 0$ எனும் சமன்பாட்டை நிறைவு செய்யும் அனைத்து மெய்யெண்களையும் காண்க.

Find all real numbers satisfying the equation : $4^x - 3(2^{x+2}) + 2^5 = 0$.

**33.** நிறுவுக : $2\tan^{-1}\frac{1}{2}+\tan^{-1}\frac{1}{7}=\tan^{-1}\frac{31}{17}$

Prove that $2\tan^{-1}\frac{1}{2}+\tan^{-1}\frac{1}{7}=\tan^{-1}\frac{31}{17}$

**34.** (6, 7, 4) மற்றும் (8, 4, 9) என்ற புள்ளிகள் வழியாகச் செல்லும் நேர்க்கோடு $xz$ மற்றும் $yz$ தளங்களை வெட்டும் புள்ளிகளைக் காண்க.
Find the points where the straight line passes through (6, 7, 4) and (8, 4, 9) cuts the $xz$ and $yz$ planes.

**35.** $\lim\limits_{\theta\to 0}\left(\frac{1-\cos m\theta}{1-\cos n\theta}\right)=1$ எனில், $m=\pm n$ என நிறுவுக.

If $\lim\limits_{\theta\to 0}\left(\frac{1-\cos m\theta}{1-\cos n\theta}\right)=1$, then prove that $m=\pm n$

**36.** நேரியல் தோராய மதிப்பீட்டு முறையில் $\sqrt[4]{15}$ -ன் தோராய மதிப்பினைக் காண்க.

Use the linear approximation to find approximate value of $\sqrt[4]{15}$

**37.** $\int_0^\infty e^{-x}x^n\,dx=5!$ எனில், $\int_0^\infty e^{-x}x^{n-1}\,dx$ -ன் மதிப்பினைக் காண்க.

If $\int_0^\infty e^{-x}x^n\,dx=5!$, then find the value of $\int_0^\infty e^{-x}x^{n-1}\,dx$

**38.** $4P(X=4)=P(X=2)$ மற்றும் $n=6$ எனும்படி உள்ள $X\sim B(n, p)$ -ன் பரவல், சராசரி மற்றும் திட்ட விலக்கம் ஆகியவற்றைக் காண்க.
If $X\sim B(n, p)$ such that $4P(X=4)=P(X=2)$ and $n=6$, find the distribution, mean and Standard Deviation of X.

**39.** கொடுக்கப்பட்ட கணத்தின் மீது பின்வரும் செயலானது (i) அடைவுப் பண்பு (ii) சேர்ப்புப் பண்பு மற்றும் (iii) சமனிப் பண்பு ஆகியவைகளைப் பெற்றிருக்குமா எனச் சரிபார்க்க.

$m*n=m+n-mn;\ m, n\in \mathbf{Z}$

Verify (i) Closure property (ii) Associative property and (iii) Existence of identity for the following operation on the given set :

$m*n=m+n-mn;\ m, n\in \mathbf{Z}$

**40.** $z_1 = \overline{1+i}$ மற்றும் $\overline{z_2} = 1 - i$ எனில், $\left(\frac{z_1}{z_2}\right)^{2026}$ -ன் நேர்மாறைக் காண்க.

If $z_1 = \overline{1+i}$ and $\overline{z_2} = 1 - i$, find the inverse of $\left(\frac{z_1}{z_2}\right)^{2026}$

## பகுதி - IV / PART - IV

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **7x5=35**

**Note :** Answer **all** the questions.

**41.** (அ) பின்வரும் நேரியச் சமன்பாட்டுத் தொகுப்பை நேர்மாறு அணி காணல் முறையை பயன்படுத்தி தீர்க்க :

$2x_1 + 3x_2 + 3x_3 = 5$
$x_1 - 2x_2 + x_3 = -4$
$3x_1 - x_2 - 2x_3 = 3$

**அல்லது**

(ஆ) $z^3 + 2\bar{z} = 0$ என்ற சமன்பாட்டிற்கு ஐந்து தீர்வுகள் இருக்கும் என நிறுவுக.

(a) Solve the following system of equations, using matrix inversion method.

$2x_1 + 3x_2 + 3x_3 = 5$
$x_1 - 2x_2 + x_3 = -4$
$3x_1 - x_2 - 2x_3 = 3$

**OR**

(b) Show that the equation $z^3 + 2\bar{z} = 0$ has five solutions.

**42.** (அ) $p \to (\neg q \vee r) \equiv \neg p \vee (\neg q \vee r)$ என்பதை மெய்மை அட்டவணையைப் பயன்படுத்தி நிறுவுக.

**அல்லது**

(ஆ) $\int_0^{\frac{\pi}{4}} \log(1 + \tan x)\, dx = \frac{\pi}{8} \log 2$ என நிறுவுக.

(a) Prove that $p \to (\neg q \vee r) \equiv \neg p \vee (\neg q \vee r)$ using truth table.

**OR**

(b) Prove that $\int_0^{\frac{\pi}{4}} \log(1 + \tan x)\, dx = \frac{\pi}{8} \log 2$

**43.** (அ) சமன்பாட்டை தீர்க்க : $(x+1)(x+3)(x-2)(x-4)+21=0$

**அல்லது**

(ஆ) $y=\log(1+x)$ என்ற வளைவரையை வரைக.

(a) Solve the equation
$(x+1)(x+3)(x-2)(x-4)+21=0$

**OR**

(b) Sketch the curve $y=\log(1+x)$.

**44.** (அ) $x-y+4=0$ என்ற நேர்க்கோடு $x^2+3y^2=12$ என்ற நீள்வட்டத்தின் தொடுகோடு என நிறுவுக. மேலும் தொடும் புள்ளியைக் காண்க.

**அல்லது**

(ஆ) ஒரு மாதிரியில் காணப்படும் கதிரியக்க அணுக்கருக்கள் சிதைவுறும் வீதமானது அந்நேரத்தில் அந்த மாதிரியில் காணப்படும் அணுக்கருக்களின் எண்ணிக்கைக்கு விகிதமாக அமைந்துள்ளது. 100 ஆண்டு கால இடைவெளியில் ஒரு மாதிரியில் ஆரம்பத்தில் காணப்படும் கதிரியக்க அணுக்கருக்களின் எண்ணிக்கையில் 10% சிதைவுறுகிறது. 1000 ஆண்டுகள் முடிவில் ஆரம்பத்தில் காணப்படும் கதிரியக்க அணுக்கருக்களின் எண்ணிக்கையில் எவ்வளவு மீதமிருக்கும் ?

(a) Show that the line $x-y+4=0$ is a tangent to the ellipse $x^2+3y^2=12$. Also find the co-ordinates of the point of contact.

**OR**

(b) Assume that the rate at which radioactive nuclei decay is proportional to the number of such nuclei that are present in a given sample. In a certain sample 10% of the original number of radioactive nuclei have undergone disintegration in a period of 100 years. What percentage of the original radioactive nuclei will remain after 1000 years ?

**45.** (அ) வெக்டர் முறையில், $\cos(\alpha+\beta)=\cos\alpha\,\cos\beta-\sin\alpha\,\sin\beta$ என நிறுவுக.

**அல்லது**

(ஆ) $(x^2+y^2)\mathrm{d}y=xy\mathrm{d}x$. $y(1)=1$ மற்றும் $y(x_0)=\mathrm{e}$ எனக் கொடுக்கப்பட்டுள்ளது. $x_0$ -ன் மதிப்பைக் காண்க.

(a) By Vector method prove that :
$\cos(\alpha+\beta)=\cos\alpha\,\cos\beta-\sin\alpha\,\sin\beta$

**OR**

(b) $(x^2+y^2)\mathrm{d}y=xy\mathrm{d}x$. It is given that $y(1)=1$ and $y(x_0)=\mathrm{e}$. Find the value of $x_0$.

**46.** (அ) ஒரு தனிநிலை சார்பு X -ன் நிகழ்தகவு நிறை சார்பானது :

| $x$ | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| $f(x)$ | k | 2k | 6k | 5k | 6k | 10k |

எனில், (i) $P(2<X<6)$ (ii) $P(2\le X<5)$

(iii) $P(X\le 4)$ (iv) $P(3<X)$

என்பவற்றைக் காண்க.

**அல்லது**

(ஆ) ஒரு நீருற்றில், ஆதியிலிருந்து 0.5 மீ கிடைமட்டத் தூரத்தில் நீரின் அதிகபட்ச உயரம் 4 மீ, நீரின் பாதை ஒரு பரவளையம் எனில், ஆதியிலிருந்து 0.75 மீ கிடைமட்டத் தூரத்தில் நீரின் உயரத்தைக் காண்க.

(a) A random variable X has the following probability mass function.

| $x$ | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| $f(x)$ | k | 2k | 6k | 5k | 6k | 10k |

Find (i) $P(2<X<6)$ (ii) $P(2\leq X<5)$

(iii) $P(X\leq 4)$ (iv) $P(3<X)$

**OR**

(b) At a water fountain, water attains a maximum height of 4 m at horizontal distance of 0.5 m from its origin. If the path of water is a parabola, find the height of water at a horizontal distance of 0.75 m from the point of origin.

47. (அ) $s(t)=2t^3-9t^2+12t-4$, இங்கு $t\geqslant 0$ எனும் விதிப்படி ஒரு கோட்டில் ஒரு துகள் நகர்கிறது.

(i) எந்நேரங்களில் துகளின் திசை மாறுகிறது ?

(ii) முதல் 4 வினாடிகளில் துகள் பயணித்த மொத்த தூரத்தைக் காண்க.

(iii) திசைவேகம் பூச்சிய மதிப்பை அடையும் நேரங்களில் எல்லாம் துகளின் முடுக்கம் காண்க.

**அல்லது**

(ஆ) (1, −2, 4) என்ற புள்ளி வழிச் செல்வதும் $x+2y-3z=11$ என்ற தளத்திற்கு செங்குத்தாகவும் $\frac{x+7}{3}=\frac{y+3}{-1}=\frac{z}{1}$ என்ற கோட்டிற்கு இணையாகவும் அமையும் தளத்தின் துணையலகு அல்லாத வெக்டர் சமன்பாடு மற்றும் கார்டீசியன் சமன்பாடுகளைக் கூறுக.

(a) A particle moves along a line according to the law $s(t)=2t^3-9t^2+12t-4$, where $t\geqslant 0$.

(i) At what times the particle changes direction ?

(ii) Find the total distance travelled by the particle in the first 4 seconds.

(iii) Find the particle's acceleration each time the velocity is zero.

**OR**

(b) Find the non-parametric form of Vector equation and Cartesian equation of the plane passing through the point (1, −2, 4) and perpendicular to the plane $x+2y-3z=11$ and parallel to the line $\frac{x+7}{3}=\frac{y+3}{-1}=\frac{z}{1}$

- o O o -